நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.
முன்னிலை-திரு.து.ஹரிராம், பி.காம்., பி.எல்.,
நீதித்துறை நடுவர், திருவையாறு.

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | |
|---|---|---|
| IN THE COURT OF | : | JUDICIAL MAGISTRATE THIRUVAIYARU. |
| Calendar | : | **C.C.No. 35 / 2017** |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |

| | | |
|---|---|---|
| Deposition of witness for | Prosecution : | **PW 2** |
| | Defence : | |
| | Court : | |

| | | |
|---|---|---|
| Name | : | சண்முகசுந்தரம் |
| Father's / Husband's Name | : | கணேசன் |
| Village | : | கருப்பூர் |
| Taluk | : | திருவையாறு |
| Caste | : | |
| Calling | : | கூலி வேலை |
| Religion | : | |
| Age | : | 44/2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.06.2022.

**முதல் விசாரணை**

நான் கருப்பூர் ஊரில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை பார்த்து வருகிறேன். 23.03.2017 அன்று காலை 09.30 மணியளவில் எனது மைத்துனர் சண்முகசுந்தரம் குடமுருட்டி ஆற்றிற்கு சென்றுவிட்டு வரும்போது, பிச்சைமுத்து என்பவர் பணம் கேட்டு தகாத வார்த்தையால் பேசி, பணத்தை கொடுக்காவிட்டால் கத்தியால் குத்திவிடுவேன் என்று மிரட்டி, அவரது சட்டைபையில் இருந்து ரூ.100/-ஐ பிடுங்கி கொண்டும் சென்றதாக என்னிடம் கூறினார். பின்னிட்டு மதியம் 01.00 மணியளவில் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தார். பின்னிட்டு மறுதினம் மகசர் என்னும் என்னிடமும், சுந்தர்ராஜனிடமும் தாளில் கையெழுத்து பெற்றார்கள். தற்சமயம் சுந்தர்ராஜன் இறந்துவிட்டார். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். ( **கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2/அ.சா.2 ஆக**

**குறியீடு செய்யப்படுகிறது.** ) மேற்படி கையெழுத்து போட்ட தாளில் ரூ.100/-ஐ கொடுத்ததாக உள்ளது. இது சம்மந்தமாக நடுக்காவேரி போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி**

இவ்வழக்கில் புகார்தாரர் சண்முகசுந்தரம் எனது உறவினர் என்றால் சரிதான். மேற்படி புகார்தாரர் கோனேரிராஜபுரம் , நான் கருப்பூர் என்றால் சரிதான். நான் இந்த வழக்கு சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். சண்முகசுந்தரம் என்னிடம் சொல்லியதன் அடிப்படையில்தான் பிச்சைமுத்து என்பவர் பணம் பறித்ததாக கூறினார். சம்பவம் நடந்த அன்றே நானும், புகார்தாரரும் புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். புகார் கொடுத்த அன்றே எதிரியை கைது செய்து காவல்நிலையத்தில் வைத்திருந்தார்கள். எதிரியிடம் இருந்து மறுதினம்தான் ரூ.100/-ஐ கைப்பற்றப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார்தாரருக்கும், எதிரிக்கும் முன்விரோதம் இருந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. புகார்தாரர் எதிரிக்கு எதிராக பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என்றாலும், அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை.

(ஒம்/-திரு.து.ஹரிராம், பி.காம்., பி.எல்.,)
நீதித்துறை நடுவர், திருவையாறு.